தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 25-9-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**சேவை மனப்பாண்மை மாணவர் வாழ்க்கையின் அங்கமாக வேண்டும் – வேளாண் பல்கலை துணைவேந்தர் அறிவுரை**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நாட்டு நலப்பணித்திட்ட நாள் 24-9-2015 அன்று (நேற்று) பல்கலைக்கழக அண்ணா அரங்கில் கொண்டாடப்பட்டது.

விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப பல்கலைக்கழக துணைவேந்தர் (பொறுப்பு) முனைவர். கு.ரா. ஆனந்தகுமார் அவர்கள் தனது தலைமையுரையில் கூறியதாவது மாணவர் சக்தி நாட்டு முன்னேற்றத்திற்கு மிகவும் பயனள்ளது. தேசத் தந்ததை மகாத்மா காந்தியின் கனவான நாட்டு நலப்பணித் திட்டத்தில் மாணவர்கள் இணைந்து சேவை மனப்பான்மையுடன் விளங்குவது வாழ்க்கையின் அங்கமாக இருக்க வேண்டும் என்றார். மாணவர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கனவு கண்டது போல் இந்தியா வல்லரசு ஆகும் என்றார்.

விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதன்மையர் (வேளாண்மை) முனைவர். ச. மகிமைராஜா, முதன்மையர் (வேளாண் பொறியியல்) முதன்மையர் சி. திவாகர் துரைராஜ், முதன்மையர் (முதுநிலைப் பட்டப்படிப்பு) முனைவர் ச. மோகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இவ்விழாவையொட்டி, நாட்டு நலப்பணித் திட்டத்தில் சிறப்பாக பணிபுரிந்த மாணவ மாணவியருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்தியா விஷன் - 2020, முதுமையின் ஏக்கம், உடல் உறுப்பு தானம் போன்ற மையக் கருத்துகளில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. 2014-15ம் ஆண்டுக்கான நாட்டு நலப்பணித் திட்ட அறிக்கையினை மாணவியர்கள் செல்வி. பிரிந்தி ஹயாசிந்த் மற்றும் செல்வி. ஷன்மதி ஆகியோர் வாசித்தனர்.

விழாவின் முக்கிய நிகழ்வாக, ரத்ததானம் செய்ய ஆர்வமுள்ள வேளாண் பல்கலைக்கழக மாணவ – மாணவிகள், அலுவலர்கள் ஆகியோரின் பெயர் மற்றும் தொடர்பு கொள்ளும் முகவரி ரத்த வகை போன்ற விவரங்கள் அடங்கிய இதழ் வெளியிடப்பட்டது. இதழினை பல்கலைக்கழக துணைவேந்தர் (பொறுப்பு) கு.ரா. ஆனந்தகுமார் அவர்கள் வெளியிட பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலைய முதன்மையர்கள் பெற்றுக் கொண்டனர். விழா நிறைவாக மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இவ்விழாவில், நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். க. குமுதா, திட்ட அலுவலர்கள் மற்றும் **600** மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்


TAMIL NADU


TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY